# கொழும்பு காலிமுக கிறிஸ்துநாதர் ஆலய வரலாறு

ஆக்கம் - நெப்போலியன் பத்மநாதன் BTh. MTh. (Glamorgan) PhD (Candidate-Wales)

எமது ஆலயத்தின் அடிக்கல் ஜனவரி மாதம் 21ம் திகதி 1853ம் ஆண்டு நாட்டப்பட்டு, 1853ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ம் திகதி வியாழனன்று அத்தியட்சகர் ஜேம்ஸ் சாப்மன் அவர்களால் மாலை நான்கு மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆராதனையில் கொழும்பு கவர்னர் அவர்கள் உட்பட ஏராளமான பிரித்தானிய அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் தமிழ் சிங்கள மக்கள் கலந்து கொண்டனர். அத்தியட்சகர் அவர்கள் மல்கியா 1.:11 இல் உள்ள "சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அஸ்தமிக்கும் திசை வரை …" என்ற பகுதியிலிருந்து தனது பிரசங்கத்தை செய்தார். இந்த ஆலயம் ஆரம்பத்தில் கொழும்பு மிசன் ஆலயம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இடைக்காலத்தில் தமிழ் சபைக்கு "கொழும்பு தெற்கு தமிழ் பாஸ்ட்ரேட்" என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. ஆலயமானது "மும்மொழி மக்களும் ஒற்றுமையாக ஆராதிக்க வேண்டும்" என்ற ஒரே நோக்கத்திற்காக கட்டப்பட்டது. எனவே மும்மொழிகளிலும் ஆராதனைகள் நடத்தப்பட்டன. காலை 8 மணிக்கு தமிழிலும், 11.30 மணிக்கும் மாலை 5.15 மணிக்கும் ஆங்கிலத்திலும், பிற்பகல் 2.15 மணிக்கு சிங்களத்திலும் ஆரம்பத்தில் ஆராதனைகள் நடந்தன. இவ்வாலயம் இலங்கை சீ.எம்.எஸ் மிசனரி சங்கத்தின் தலைமை ஆலயமாக இருந்தபடியால் அவர்களின் பேராலயமாகவும் கருதப்பட்டது.

ஆலயத்தின் நிர்மானப்பணிக்காக அரசாங்கம் 1500 பிரித்தானிய பவுன்ஸ்களையும், கொழும்பு முதலிமார்கள் 2000 பிரித்தானிய பவுன்ஸ்களையும் கொடுத்திருந்தனர். இங்கிலாந்து தேச சீ.எம்.எஸ் சங்கம் 860 பிரித்தானிய பவுன்ஸ்களையும் கொடுத்தது. 704 பிரித்தானிய பவுன்ஸ்கள் உள்ளூரில் சேகரிக்கப்பட்டது. அத்தோடு மலையகத்தில் தோட்டத் தொழிலாளிகள் மத்தியில் ஊழியம் செய்த தமிழ் கூலி மிசனைச் சேர்ந்த மிசனரிமார்கள், இந்திய திருநெல்வேலியைச் சேர்ந்த உபதேசிமார், திருநெல்வேலி மிசனரி சங்கத்தினர், மற்றும் பண்ணைவிளை கிறிஸ்தவர்களும் நிதியுதவி செய்துள்ளனர். ஆலயத்திற்கான காணியை அரசாங்கம் மானியமாக கொடுக்க மறுத்ததால் 225 பிரித்தானிய பவுன்ஸ்கள் செலவில் தற்போதைய காணியில் ஒரு பகுதி வாங்கப்பட்டது.

ஆலயத்தின் முதலாவது குருவானவரான கனம் பெற்றீற் அவர்கள் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகையால் தமிழ் ஆராதனையையும் அவரே நடத்தினார் இவர் பதினான்கு வருடங்கள் திருநெல்வேலியிலும் சென்னையிலும் மிசனரியாக தமிழில் பணியாற்றியவர். 20.03.1950 அன்று சீ.எம்.எஸ் சங்கத்தின் நிதிக் காரியதரிசியாக கொழும்பு வந்தார்.

ஆலயம் கட்டும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. கனம் பெற்றீற் அவர்கள் அதற்காக 1852 இல் மூன்று துண்டுக் காணிகளை வாங்கினார். 1853ம் ஆண்டு ஆலயம் கட்டி முடிக்கப்படும் வரை இதற்காக கடுமையாக உழைத்தார். கனம் பெற்றீற் அவர்களால் முதலாவது தமிழ் ஆராதனை 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடத்தப்பட்டது, பிரசங்க வாக்கியமாக மத்தேயு 18:20 வாசிக்கப்பட்டது. முதலாவது ஞானஸ்நானம் தஞ்சாவூரைச் சேர்ந்த சாமுவேலின் நான்கு வயது மகன் சீவானந்தனுக்கு 31.10.1853 அன்று கொடுக்கப்பட்டது. முதலாவது திருமணம் மோசஸ் என்பவரின் மகன் எசேக்கியேலுக்கும் அருளப்பன் சின்னப்பன் என்பவரின் மகள் கண்ணம்மாவுக்கும் 23.08.1854 அன்று நடந்தது. திரு பெற்றீற் அவர்கள் 1855 ஆண்டு ஜனவரி 9ம் திகதி சுகவீனம் காரணமாக இங்கிலாந்து திரும்பினார்.

இங்கு கடமையாற்றியவர்களில் கனம் ஹென்றி விட்லி அவர்கள் குறிப்பிடத்தக்கவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் குருவாக அபிஷேகம் பெற்றவுடனேயே இலங்கைக்குப் புறப்பட்டு 1855.01.20 அன்று கொழும்பு வந்தார். இவர்கள் ஆலயத்தின் குருவாக செப்டம்பர் மாதம் 30ம் திததி 1856 ஆண்டு பொறுப்பேற்று மூன்று மொழிகளுக்கும் பொறுப்பாக இருந்தார். ஆனாலும் 1860ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி ஆலயத்துக்குப் பக்கத்தில் இருந்த பள்ளிக்கூட சுவர் இடிந்து விழுந்ததால் மரணமடைந்தார். இவரது சேவைக்காலம் ஐந்து வருடங்கள் மட்டுமே. இவருடைய ஞாபகார்த்தமாக ஒரு நினைவுக்கல் தற்போதைய ஆங்கில குருமனைக்கு பக்கத்தில் அவர் மரணமடைந்த இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இவர் காலத்திலேயே பழைய ஆங்கில மிசன் மனை கட்டப்பட்டது. இதற்காக இவர் மூன்று துண்டு காணிகளை 1855-1857 காலப்பகுதியில் வாங்கினார். 1860 இல் குருமனை கட்டும் வேலை முடிவடைந்தது அதில் குடியேறிய சில நாட்களில் கனம் ஹென்றி விட்லி மரணமடைந்தார்.

இவருக்குப் பின் ஆலயத்தின் தமிழ் சபையைக் கவனிக்க குருவாக கனம் வில்லியம் ரோலன்ஸ் அவர்கள் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இவர் 07.12.1861 அன்று 9.30 அளவில் காலியில் வந்திறங்கி 09.12.1861 அன்று கொழும்பு வந்தார். அந்நேரம் இவருக்கு 25 வயது. இவர் வருகை தந்த காலக்கட்டத்தில் C.C.Fenn அவர்கள் ஆங்கில சபைக்கு போதகராக இருந்தார். அவர் வருகை தந்த போது தமிழ் சபை மிகவும் சிறியதாக இருந்தது. அதே நேரத்தில் மருதானையில் ஒரு சிறிய சபை கூடிவந்தது. பெண்கள் ஊழியம் எதுவும் இருக்கவில்லை. இவர் தமிழ் கற்றுக்கொள்ள ஆரம்பித்து சிறிது காலத்தில் சிறப்பாக தேர்ச்சிபெற்றார்.

இவருடைய காலத்தில்தான் ஆலயத்தின் தமிழ் சபை பாரிய வளர்ச்சி கண்டது. அது மட்டுமல்ல கொழும்பு முழுவதும் தமிழ் சபைகள் ஸ்தாபிக்கப்பட இவர் முக்கிய காரணமாக இருந்தார். இவர் மிசனரி தாகமுள்ள ஒரு குருவானவர். அதனால்

கொழும்பின் தெருவோரங்களில் ஆலயத்தின் உபதேசிமாருடன் சேர்ந்து பிரசங்கித்திருக்கிறார். அத்துடன் Slave Island ஒழுங்கைகளில் பிரசங்கித்தார். தமிழ் மக்கள் சுவிசேடத்துக்கு மிகவும் ஆவலாக செவிகொடுத்தனர். அவருடன் சவரிமுத்து, ஞானமுத்து என்ற இரு உபதேசிமார் பணிபுரிந்தனர். இக்காலத்தில் இவர் கொழும்பு முழுவதும திரிந்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து, வீதிகளில் பிரசங்கித்து சபையை கட்டினார். அவரும் மனைவியும் அயலில் உள்ள வீடுகளுக்கு சென்று இயலுமான விதத்தில் மக்களுக்கு இலவச மருத்துவ உதவியும் செய்தனர்.

இவரது முயற்சியால் மருதானை (Lockgate) இம்மானுவேல் ஞாபகார்த்த ஆலயம் கட்டப்பட்டது. 1896 மார்ச் 7ம் திகதி மருதானை ரயில் நிலையத்திற்கு முன்பாக கட்டப்பட்ட St.John's ஆலயத்தை ரயில் நிலைய விஸ்தரிப்பு வேலைகளுக்காக இழக்க வேண்டி ஏற்பட்டதால் ஒரு புதிய ஆலயம் கட்ட வேண்டிய தேவை இருந்தது. ஆனால் அதற்கான பண வசதி இருக்கவில்லை. ரோலன்ஸ் அவர்கள் தனது சொந்தப் பணத்தை செலவிட்டு இம்மானுவேல் ஞாபகார்த்த ஆலயத்தைக் கட்டி அதனை தமிழ் மக்களுக்கு பரிசாக வழங்கினார். இதனால் அந்த சபையினர் புதிய ஆலய மண்டபத்துக்கு ரோலன்ஸ் போதகரின் ஞாபகார்த்தமாக அவரது பெயரை சூட்டியுள்ளனர். இவரது சுவிசேட முயற்சியால் பல புதிய ஆலயங்கள் கொழும்பில் உதயமாகின அவையாவன பொரளை, கிரேன்பாஸ், மட்டக்குளி, முகத்துவாரம், மருதானை. இதில் கிரேன்பாஸை தவிர மற்றைய இடங்களில் இன்று ஆலயங்கள் உள்ளன.

1862 இல் இவர் தமிழ் "கூலி மிசனில்" ஏற்பட்ட இடத்தை நிரப்ப கண்டி செல்ல நேர்ந்தது பின்பு திரும்பவும் C.C.Fenn அவர்கள் இங்கிலாந்து செல்ல நேர்ந்ததால் இரண்டு சபைகளுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இவரது இல்லம் Braybrooke வீதியில் அமைந்திருந்தது. இக்காலத்தில் கொழும்பில் நான்கு தமிழ் ஆரம்ப பாடசாலைகள் மட்டுமே இருந்தன. தமிழ் மக்களின் தேவையை உணர்ந்து அக்காலத்தில் மேல் மாகாண அரசாங்க அதிபராக இருந்த C.P.Layardஐ அணுகி தமிழ் மக்களுக்கு ஒரு மிசன் இல்லத்தையும், பள்ளிக்கூடத்தையும் கட்ட Ward Place இல் ஒரு காணியை அரசாங்க மான்யமாகப் பெற்றார். முதலாவது கட்டிட வேலைகளுக்கு 1376 பவுண்ஸ் கிடைத்தது. பின்பு 300 பவுண்ஸ் கிடைத்தது. இதற்கான அடிக்கல் திருநெல்வேலியைச் சேர்ந்த Mrs.David Fenn அவர்களால் நாட்டப்பட்டது. பாடசாலை பெண்கள் பாடசாலையாக முதலில் ஆரம்பிக்கப்பட்டது, குருமனையின் வேலை 1869 செப்படம்பரில் முடிவடைந்தது, பள்ளிக்கூட வேலை டிசம்பரில் முடிவடைந்தது. இந்த இரண்டு கட்டிடங்களும் கொழும்பு தமிழ் பணிக்கு ஒரு பலமாக இருந்தது. இதற்கான பணத்தை அவரது நண்பர்களும், தகப்பனும் இங்கிலாந்திலிருந்து அனுப்பினர்.

J.H.Clowes அவர்கள் இங்கிலாந்து சென்றபடியால் திரும்பவும் ஆலய குருமனைக்கு 1866 இல் வந்தார். 1866 இல் இவருக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்தது அக்குழந்தை நுவரெலியாவில் 1867 இல் இறந்து அங்கிருக்கும் ஆலய வளவில் அடக்கம் செய்யப்பட்டது. 1868 இல் இவருக்கு இன்னொரு குழந்தை கிடைத்தது. அவ்வேளை வார்ட் பிளேசில் உள்ள புதிய தமிழ் குருமனையில் குடியமர்ந்தார். இக்காலத்தில் மைக்கல் என்பவர் உபதேசியாராக இருந்தார்.

திருமதி.ரோலன்ட்ஸ் அவர்கள் முதன் முதலாவதாக தமிழ் தாய்மார் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இதில் பத்து முதல் பதினான்கு பேர் வரை கலந்து கொண்டனர். இவர்கள் கூட்டங்களில் புத்தகங்களை வாசித்தனர், திருமதி ரோலன்ஸின் அறிவுறுத்தலை கேட்டனர் ஜெபித்தனர். இக்காலத்தில் ஆலயத்தில் பிடியரிசி காணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது. சமையலுக்கு முன்பாக பெண்கள் சமைக்கும் அரிசியில் ஒரு பிடியை வேறாக எடுத்து வைத்தனர். ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிறு மாலை இது ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டது. திருமதி.ரோலன்ஸ் அவர்கள் 25.08.1890 அன்று இறந்தார். அவரது அடக்கம் பொரளையில் நடந்தது.

தமிழ் சபையின் முதலாவது நிர்வாகக் குழு ரோலன்ஸ் அவர்களால் 1870 இல் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஒரு காரியதரிசியும், பொருளாளரும், சேகரிப்பாளரும் அடங்குவர். இந்தக் கமிட்டி தேவையான நேரங்களில் தொடர்ந்து கூட்டங்களை நடத்தி வந்துள்ளது. ஞாயிறு வாராந்திர ஆராதனைக்குத் தேவையான பணம் இதிலிருந்து பெறப்பட்டுள்ளது.

இக்காலத்தில் சபையில் சராசரி 75 பேர் அளவில் ஆராதனையில் கலந்து கொண்டனர். மருதானையில் ஆரம்பிக்கப்பட்ட ஆராதனையில் 40 பேர் கலந்து கொண்டனர். அத்துடன் மட்டக்குளியில் ஒரு ஆராதனை நடந்தது இதில் கிரேன்பாஸ் முகத்துவாரம் பகுதிகளை சேர்ந்தவர்கள் 40 பேர் கலந்தனர். இக்கூட்டம் 'பப்திஸ்' ஆலயத்தில் நடந்தது. இக்காலத்தில் J.C.Mill அவர்கள் தமிழுக்கு உதவியாக இருந்தார்கள். தமிழ் சபை அதிகளவில் வளர்ந்ததால் தழிழுக்கு ஒரு தனியான தமிழ் போதகர் தேவையென்பது வெகுவாக உணரப்பட்டது.

1871 செப்டம்பர் வரையும் இருந்த ரோலன்ட்ஸ் அவர்கள் இங்கிலாந்து சென்றதால் திரு.வுட் அவர்கள் தமிழுக்குப் பொறுப்பாக வந்தார்கள். கொழும்பில் இருந்த தமிழர்களில் அதிகமானவர்கள் இந்தியர்கள் மற்றவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்

இவர்கள் கொழும்பில் தற்காலிகமாக தங்கியிருந்தவர்கள். இக்காலத்தில் கொழும்பில் வசித்த தமிழர்களின் எண்ணிக்கை 60,000.

1881 இல் திருநெல்வேலியைச் சேர்நத கனம் எஸ்.எஸ்.சாமுவேல் அவர்கள் தமிழ் சபையின் முதலாவது தமிழ் போதகராக வந்தார். திருநெல்வேலி மிசனைச் சேர்ந்த ஆபிரகாம் சாமுவேலின் மகனான இவர் சென்னையில் உபதேசியாராக கடமையாற்றி 1878 இல் சென்னையில் Deacon நியமனம் பெற்றார். 1881 இல் அங்கிருந்து எமது ஆலயத்துக்கு வந்தார். இங்கு 1881 இல் போதகராக அபிசேகிக்கப்பட்டு நியமனம் பெற்றார். 1881 இலிருந்து அவர் இங்கு கடமையாற்றும் காலத்தில் தனது மனைவி பிள்ளை இருவரையும் இழக்க நேரிட்டது. ஆயினும் இவரது பணி பெரிய அர்ப்பணிப்புடன் நடந்தது. பதின்மூன்று வருடங்கள் தமிழ் சபையில் கடமையாற்றி மே மாதம் 6ம் திகதி 1894ம் வருடம் ஞாயிறன்று மரித்தார். இவர் கடைசியாக செய்த பிரசங்கம் யோவான் 7:38 ஐப் பற்றியதாதும். செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இவரது அடக்க ஆராதனை சபையிலும் அடக்கம் பொரளையிலும் நடந்தது.

1853 இல் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் ‘கபோக்’ கற்களினால் கட்டப்பட்டிருந்தபடியால் 1897ம் ஆண்டு பருவ கால மழைக்கு சுவர்களில் தண்ணீர் ஊறி சுவர்கள் இடிந்து விழும் நிலைக்கு ஆளாகியதுடன் முற்புற சுவர் ஆகஸ்ட் 10ம் திகதி இரவு 7.30 மணிக்கு பாரிய சத்தத்துடன் இடிந்து விழுந்தது. இதனால் ஆலயம் முழுவதுமாக இடிக்கப்பட்டு 1898ம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் திகதி அத்தியட்சகர் றெஜினோல்ட் ஸ்டீபன் கொப்பில்ஸ்டனால் அடிக்கல் நாட்டப்பட்டு பழைய ஆலயத்தின் அமைப்பிலேயே செங்கற்களினால் கட்டப்பட்டு 1899 மார்ச் மாதம் 18ம் திகதி பிரதிஸ்டை செய்யப்பட்டது. இதன் இடைப்பட்ட ஒன்பது மாத காலத்தில் ஆராதனைகள் ஆலயத்துக்கு அருகில் உள்ள பள்ளிக்கூட அறையில் நடாத்தப்பட்டன.

ஆலய மணிக்கூட்டு கோபுரத்தின் வேலைகள் 1918ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1919ம் ஆண்டு ஆணி மாதம் 30ம் திகதி பிரதிஸ்டை செய்யப்பட்டது. இதன் மணியானது ஒரு தொன் எடையுள்ளதாக இருக்கிறது. இதனை திருமதி.வில்லியம் வில்சன் மிட்சேல் என்பவர் தனது கணவரின் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு செய்தார்கள். மணியில் அவரது பெயர் பொரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் சபையானது ஆரம்பத்தில் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. கனம் யோர்க் அவர்களின் காலத்தில் குருவானவருக்கு வேதனம் கொடுக்க ஆலயத்தில் பணம் இருக்கவில்லை. அதனால் சில மாதங்கள் அவருக்கு சம்பளப் பாக்கியும் இருந்தது. குருமனை திருத்த வேலைகளுக்காக கனம் யோர்க்

அவர்கள் தனது சொந்தப் பணத்தை செலவிட்டு அதனை சிறிது சிறிதாக பொருளாளரிடமிருந்து திரும்பப் பெற்றுள்ளார். போதகர் யோர்க் அவர்கள் ஆலயத்தின் நியமனத்தை ஏற்கும்போது 'நான் பணத்துக்காகப் பணி செய்ய வரவில்லை மாறாக எனது சொந்தப் பணத்தையும், நேரத்தையும், சக்தியையும் கடவுளின் பணிக்காக செலவிடவே வந்துள்ளேன்' என குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் சபை மிகவும் பணக் கஷ்டத்தில் இருந்துள்ளது. பொருளாளர் தனது சொந்தப் பணத்தை செலவிட்டு அதைத் திரும்பத் தரும்படி அடிக்கடி குருவானவரை வற்புறுத்தியுள்ளார் இது குருவானவரால் நிர்வாகக் குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிக்கூடத்தை நிர்வகிக்க பணம் இல்லாத காரணத்தால் பொருளாளர் தனது பணத்தை செலவிட்டு அதை திரும்பப் பெற முடியாத நிலையில் அதையிட்டு தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அந்தப் பணம் நீண்ட காலமாக திரும்ப செலுத்தப்படாத காரணத்ததால் சபையின் மீது வழக்குத் தொடருவதாகவும் பயமுறுத்தியுள்ளார். இந்த விடயம் நீண்ட காலமாக இழுபறியாக இருந்தது பின்பு அத்தியட்சகர் வரை சென்று முடிவடைந்தது. சபைக்கு பணம் சேகரிக்க ஒரு ரூபா நிதியொன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு ரூபா டிக்கட்டுகள் அச்சிட்டு விற்றிருக்கிறார்கள். அது பின்பு இரண்டு ரூபா நிதியாக மாற்றம் பெற்றது. அதே நேரம் ஆலய சேர்ப்பின் பண்டிகை ஏலப் பாக்கி மற்றும் சந்தா பாக்கிகளை சேகரித்தால் அதற்கு உபதேசிமாருக்கு கமிசன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆலயத்துக்கு நிதி சேகரிக்க ஒரு சினிமாப் படம் காட்டவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அது கைக்கூடவில்லை அதன் பின்பு யோசேப்பின் சரிதத்தை மெதடிஸ்ட் கல்லூரி மண்டபத்தில் நாடகமாக நடிக்க எடுத்த முயற்சிகளும் கைகூடவில்லை. பின்பு கெட்ட குமாரன் கதையை ஒரு மலையக நாடகக் குழுவைக் கொண்டு இரட்சண்ய சேனை (Salvation Army) மண்டபத்தில் நடத்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இப்படியாக சபைக்கு பணம் சேகரிப்பது ஒரு முக்கிய விடயமாக இருந்துள்ளது. இதற்கு காரணம் சபைபொருளாதார ரீதியாக மிகவும் பினதங்கிய நிலையில் இருந்தமையேயாகும். பணம் இல்லாத காரணத்தால் பாடகர் குழுவில் உள்ள சிலருக்கு அங்கிகள் இல்லாமல் பாடகர் குழுவில் இருந்துள்ளார்கள். இதனை சில சபை மக்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். குருவானவருக்கு சம்பளப்பாக்கி செலுத்த இயலாத பட்சத்தில் ஒரு சபை அங்கத்தவரிடமிருந்து 4% வருடாந்த வட்டிக்கு சபை பணம் பெற்றுள்ளது. இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் தளராது சபையின் அங்கத்தினர்களும், மூப்பர்களும் எடுத்த அனைத்து முயற்சிகளும் காரணமாக காலப்போக்கில் ஆலயத்தின் நிதி நிலைமை சீராகியது. அதன் பின்பு நிதியை கையாள்வதில் நிர்வகிப்பதில் நிர்வாகத்தினர் மிகவும் அவதானமாக இருந்துள்ளதுடன், கட்டுப்பாடுடனும் நடந்து கொண்டபடியால் ஆலயத்தின் பணம் நிலையான வைப்பிலிடப்பட்டு, சிறிது சிறிதாக பெருக ஆரம்பித்தது, வருமானமும் அதிகரித்தது. ஆயினும் கஷ்டங்கள் மத்தியிலும், பின்வந்த காலங்களிலும் ஆலயத்தின்

மூப்பர்கள் எந்தவிடத்திலும் ஆலயத்தின் போதகரின் சம்பளத்தை அதிகரிப்பதிலும், அவருக்கான வசதிகளை செய்து கொடுப்பதிலும், உபதேசிமாரை கவனிப்பதிலும் குறைவு மனப்பான்மையை காட்டவில்லை. ஆலயத்தின் ஊழியர்களுக்கு உதவி தேவையான போதெல்லாம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டது கடந்தகாலத்திலிருந்து தெரிய வருகிறது. அதே நேரம் விதவைகளுக்கான நிதியும், வறியவர்களுக்கான நிதியும் தனித்தனியாக இருந்துள்ளன. 1944 - 1945ம் ஆண்டுகளில் சபையின் வருமானத்தின் 5% ஏழைகள் நிதிக்காக வைப்பிலிடப்பட்டுள்ளது. அதே போல் வருமானத்தின் 10% விதவைகளுக்காக வைப்பிலிடப்பட்டுள்ளது.

தமிழ் சபையின் பணியை கவனிக்க குருவானவருக்கு உதவியாக ஒரு உபதேசியாரும் வேதாகம பெண் ஊழியரும் (Bible Women) இருந்துள்ளார். ஆலயத்தில் 28 வருடங்களாக கடமையாற்றிய உபதேசியார் திரு.ஜே.எஸ்.தேவதாசன் அவர்கள் 1949ம் ஆண்டு காலமானார். இவர் கடமையாற்றிய 28 வருடங்களில் 26 வருடங்கள் அவரது குடும்பம் இந்தியாவில் இருந்துள்ளது 1944ம் ஆண்டு குடும்பத்தை இலங்கைக்கு கொண்டு வந்து இரண்டு வருடங்களில் இவர் சுகவீனமுற்று காலமானார். அவரைத் தொடர்ந்து ஆபிரகாம் சத்தியநாதன் உபதேசியாராக 1946ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அதைப்போல் கனம் ஈ.டி.சாமுவேல் அவர்கள் இந்தியப் பிரஜையாக இருந்து இங்கு வதிவிட விசாவில் தங்கியிருந்து கடமையாற்றினார். வேதாகம ஊழியராக கடமையாற்றிய திருமதி.டீ.சொர்னம் இராஜமணி அம்மையார் ஐந்து வருட காலமாக பணியாற்றி காலமானார். கனம் யோர்க் அவர்களும் இங்கு கடமை புரியும் காலத்திலேயே காலமானார். கனம் யோர்க், கனம் ஈ.டீ.சாமுவேல் அவர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கனம் முத்துவேலு அவர்கள் சில மாதங்கள் பணியாற்றியுள்ளார்.

ஆலய சுவிசேட ஊழியங்களுக்காக அத்தியாட்சாதீன மிசன் நிதியிலிருந்து ஒழுங்காக மான்யம் கிடைத்துள்ளது. இதன் மூலம் சுவிசேட ஊழியங்கள் நடத்தப்பட்டன. கொள்ளுப்பிட்டி ஒழுங்கையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. சந்திகளில் உபதேசிமார்கள் பிரசங்கித்திருக்கிறார்கள். ஆலயத்தின் சுவிசேடப் பணிகளுக்காக தனி நிதியும் இருந்துள்ளது. அத்துடன் தெஹிவளை ஆலயத்தின் தமிழ் குருவானவர்கள் இல்லாத நேரத்தில் ஆலயத்தின் குருமார் தெஹிவளை ஆலயத்தின் தமிழ் ஆராதனையை தொடர்ந்து நடத்தியிருக்கிறார்கள். தமிழ் சபையின் குருவானவர்கள் மொரட்டுவை பரி.மார்க் ஆலயம், தன்டுகமை பரி.மார்க் ஆலயம் ஆகியவற்றில் குருமார்கள் இல்லாத நேரங்களில் ஆராதனை நடத்துவதில் உதவிகள் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து வந்து விசாவின்றி வசிக்கும் இந்தியத் தமிழர்களை அரசாங்கம் கைது செய்ய ஆரம்பித்தபடியால் தமிழ் சபையின் குருவானவர் கொம்பனித் தெரு தடுப்பு முகாமில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒரு நற்கருணை

ஆராதனையை அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு 1963 இலிருந்து நடத்தினார். 1960 இலிருந்து 1962 வரை ஒரு ஜெபக் குழு சபையில் தொடர்ச்சியாக வருடக்கணக்கில் ஜெபித்து வந்துள்ளது. 1960 இல் இந்தியாவிலிருந்து வருகை தந்த திரு.ஜோன் கணேசன் அவர்கள் மூன்று நாட்கள் எழுப்புதல் கூட்டங்களை சபை மண்டபத்தில் நடத்தினார் இதனை கொழும்பு சுவிசேட ஐக்கியம் ஏற்பாடு செய்திருந்தது. திரு.தினகரன் அவர்கள் 70ம் ஆண்டுகளில் முதன் முதலாக இலங்கை வந்தபோது எமது ஆலயத்தில் கூட்டங்களை நடத்தினார். தாய்மார் சங்கத்தினர் 1960ம் ஆண்டு சபையின் ஆன்மீகத் தேவையைக் கருத்திற் கொண்டு ஒரு நூலகத்தை ஆரம்பித்தனர் அதற்காக சபை அவர்களுக்கு ஒரு அலுமாரியை வழங்கியது.

எமது ஆலயத்தின் பாடகர் குழுவானது ஆரம்பபால முதல் சிறப்பான ஒன்றாக காணப்பட்டுள்ளது. இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அனுசரணையுடன் பாடகர் குழுவின் கிறிஸ்மஸ் கரோல் ஆராதனை திரு.வை.எஸ்.டேவிட் அவர்கள் பாடகர் குழு தலைவராக இருந்த காலத்தில் வருடா வருடம் இலங்கை வானொலியில் 1962ம் வருடம் வரை ஒலிபரப்பப்பட்டது. அதற்குப் பின் மற்ற சபைகளுக்கு சந்தர்ப்பமளிக்கும் நோக்கத்துடன் தேசிய கிறிஸ்தவ மன்றம் இதனை நிறுத்தியது.

ஆலய சிறு பிள்ளைகளை ஓய்வு நாள் பாடசாலைக்கு அழைத்துவர ஒரு மாட்டு வண்டில் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தது. இதற்காக 1946ம் ஆண்டு மாதாந்தம் ஐந்து ரூபா வாடகை கொடுத்துள்ளார்கள். 1962 இல் சபையின் சிறுவர்கள் 139 பேர்கள். இதில் 65 பேர் ஒய்வு நாள் பாடசாலையில் கற்றனர் 39 பேர் வேறு ஒய்வு நாள் பாடசாலைகளுக்கு சென்றனர். 1944 இல் 375 பெரியவர்களும் 108 பிள்ளைகளும் சபையில் இருந்துள்ளனர் இதனால் சபை வார்டன்மார் நான்கு பேர் போதாது இன்னும் ஒருவர் அல்லது இருவர் தேவை என அத்தியட்சரிடம் கேட்டுள்ளனர். 1960 இல் சபையின் மக்கள் சிறுவர் பெரியவர் உட்பட 737 பேர்கள்.

ஆரம்ப காலத்தில் தமிழ் சபையின் ஆராதனை நேரம் 8 மணியாக இருந்தாலும் இடைக்காலத்தில் அது 7.45 ஆக மாற்றம் பெற்றது. 8.15 மணிக்கு மாற்றும்படி ஆங்கில சபையினர் கேட்டாலும் அது எழுத்து மூலம் கேட்கப்படாததால் அனுமதி வழங்கப்படவில்லை. திரும்பவும் அது பிற்காலத்தில் 8 மணிக்கு மாற்றப்பட்டது. ஆங்கில சபை 8.30 மணிக்கு மாற்ற எடுத்த முயற்சிகளை தமிழ் சபை எதிர்த்ததால் அது கைவிடப்பட்டது. தமிழ் சபையின் நிர்வாகத்தில் தலையிட்டதாகவோ தீர்மானங்களை மாற்றியதாகவோ எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. தமிழ் சபை எப்பொழுதும் சுயாதீனமாகவே செயற்பட்டுள்ளது. ஆராதனை நேரத்தை மாற்றும் உரிமையும் ஆங்கில சபைக்கு இருக்கவில்லை. அதற்கும் தமிழ் சபையின் இணக்கம் தேவைப்பட்டது. இணங்காதபட்சத்தில் அது மீறப்படவில்லை. நிர்வாகம் பொருளாதாரம்

அனைத்தும் தனி அங்கமாக இருந்துள்ளதுடன் சுயாதீனமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு சுயாதீனமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆங்கில சபையின் எவ்வித தலையீடுகளும் இருக்கவில்லை. இது இரண்டு சபைகளினதும் கூட்ட அறிக்கைகளில் காணக்கிடைக்கிறது. அத்துடன் கனம் ஹென்றி விட்லியின் பின் கனம் ரோலன்ஸ் காலத்திலிருந்து தனியான ஒரு போதகரே சபையை நடத்தியுள்ளார். சபையின் மும்மொழி ஐக்கிய ஆராதனை 1972ம் ஆண்டுக்கு முன்பிருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

1959 இல் சி.எம்.எஸ். பொறுப்பிலிருந்து அத்தியாட்சாதீனத்துக்கு சபையின் பழைய குருமனையின் (கிளெனி வீதி குருமனை) பொறுப்பு மாற்றப்பட்டபோது சபையானது அதனை வாங்குவதற்கு எடுத்த முயற்சிகளுக்கு பொருளாதாரம் இடம் கொடுக்காததால் கைவிடப்பட்டது. இதற்காக சில நிதி ஸ்தாபனங்களை அணுகி கடன் பெற எடுத்த முயற்சிகள் சில நிர்வாக அங்கத்தவர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. அதன் பின்பு சபை ஒரு காணியை சொந்தமாக வாங்குவதற்கு எடுத்த தீர்மானமும் கைகூடவில்லை. குருமனையின் தொலைபேசி அனுமதிக்காக 1959 இல் விண்ணப்பித்து 1960.09.04 இல் அதற்கான அனுமதி கிடைத்தது. ஆலய வளவினுள் புதிய குருமனை கட்டப்பட்டு பழைய கிளனி வீதி குருமனை கைவிடப்பட்டதால் நூறு வருடங்களுக்கு மேல் சபையின் பாவனையில் இருந்த அதனை அத்தியட்சகர் அங்கிலிக்கன் சுவிசேட ஐக்கியத்தின் (AEFSL) கிளை ஸ்தாபனமான அங்கிலிக்கன் உள்நாட்டு மிசனரி சங்கத்தின் (AIMS) காரியாலயத்தின் பாவனைக்காக கொடுத்தார். இதில் சபைக்கு அதிருப்தி இருந்தாலும் அது சபையின் பெயரில் இல்லாது அத்தியட்சகரின் பெயரில் இருந்தபடியால் சபையால் எதிர்ப்பு தெரிவிக்க முடியவில்லை.

ஆலய வளவினுள் இருந்த பள்ளிகூடம் அரசாங்கத்தால் 1961ம் ஆண்டு சுவீகரிக்கப்பட்டதால் சபைக்கு பெரிய தடங்கல் உண்டானது. காரணம் தமிழ் சபையின் ஓய்வு நாள் பாடசாலை சேர்ப்பின் பண்டிகை கமிட்டிக் கூட்டங்கள், ஜெபக் கூட்டங்கள் என்பன பள்ளிக்கூட மண்டபத்தில் நடாத்தப்பட்டன. பள்ளிக்கூடம் அரச சொத்தாக மாறியதால் பள்ளிக்கூடத்தின் தளபாடங்களைப் பாவிப்பதையும் மலசலக்கூடத்தைப் பாவிப்பதையும் பள்ளிக்கூட நிர்வாகம் விரும்பவில்லை. தலைமை ஆசிரியர் திரு.வீ.ஏ.ஏபல் கடைசிக் கிறிஸ்தவ தலைமை ஆசிரியராக இருந்தார். இவருக்குப் பின் வந்த கிறிஸ்தவரல்லாத ஒரு தலைமை ஆசிரியர் காலத்தில் பிரச்சினை அதிகமானதால் கல்வித் திணைக்களத்தின் இயக்குனருக்கு கடிதம் எழுதி அனுமதி பெற வேண்டியிருந்தது. இக்காலத்தில் தமிழ் சபைக்கு மலசலகூட வசதிகள் கூட இருக்கவில்லை. இக்காலத்தில் கமிட்டியானது பள்ளிக்கூடத்தை வேறு இடத்துக்கு மாற்ற எடுத்த எந்த முயற்சியும் கைக்கூடவில்லை. ஆயினும் பல மாத இடைவெளிக்குப் பின் கல்வித் திணைக்களம் பள்ளிக்கூடத்தை பாவிக்க 18.03.62 இல் எழுத்து மூல

அனுமதியைக் கொடுத்தது. புதிய குருமனை ஆலய வளவினுள் கட்டப்பட்ட பின்பு 1984 இல் பழைய குருமனையை பள்ளிக்கூடத்துக்கு கொடுத்து பள்ளிக்கூடத்தை திரும்பப் பெற எடுத்த முயற்சிகள் அரசியல் தலையீடு காரணமாக பலனளிக்கவில்லை.

1977ம் ஆண்டு ஆலயத்தின் பின்புறம் உள்ள 46.9 பேர்ச் காணி வீதி விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்டது. 1981ம் ஆண்டு 40 பேர்ச் காணி ஹட்டன் நசனல் வங்கிக்கு விற்கப்பட்டு அந்தப்பணத்தில் தற்போதைய சபை மண்டபமும் குருமனைகளும் கட்டப்பட்டன. அத்துடன் ஆக மொத்தமாக கிளனி வீதியிலுள்ள தமிழ் குருமனை, பக்கத்திலுள்ள பள்ளிக்கூடம், அட்டன் நசனல் வங்கிக் காணி, டுப்ளிகேசன் வீதி விஸ்தரிப்பில் இழந்த காணி, ஆகிய பெருமளவு காணிகள் ஆலயத்தால் இழக்கப்பட்டுள்ளன.

தமிழ் சபையின் கூட்ட அறிக்கைப் புத்தகங்கள் இல்லாததால் இதனைத் தவிர மேலதிக சபை நடவடிக்கைகளை அறிய முடியாதுள்ளது. 1983 கலவரத்தில் ஒரு புத்தகமும், அதற்கு முன் ஒரு புத்தகமும் காணாமல் போனதாக அறியக் கிடைக்கிறது. இப்பொழுது இருக்கும் புத்தகங்களும் சீரான நிலையில் இல்லை. இந்த மூன்று புத்தகங்களும் முறையே 1935 தொடக்கம் 1951 வரை, 1959 தொடக்கம் 1965 வரை, 1984 தொடக்கம் 1993 வரை உள்ளன. இதில் உள்ள தகவல்கள் பாதுகாக்கப்படுவது சபையின் எதிர்கால சந்ததிக்கு பேருதவியாக இருக்கும்.

தமிழ் சபையினர் எக்காலத்திலும் தேவ பக்தியிலும், நீதியிலும், அன்பிலும் நிறைவானவர்களாக காணப்பட்டபடியாலும், தேவனை நேசித்து அவரை மெய்யாக ஆராதனை செய்தபடியாலும் கடந்த 150 வருடங்களாக பல சூழ்நிலைகளிலும் கடவுள் அவர்களை கைவிடாமல் வழிநடத்தி வந்துள்ளார். அவர் தனக்காக உண்டு பண்ணிய அவரது வாசஸ்தலத்தில் இன்றுவரை அவரது பிள்ளைகள் பல தலைமுறைகளாக வழிபட தந்த கிருபையை நினைக்கும் போது அவரது வாக்குத்தத்தங்கள் இன்னும் பல தலைமுறைகளுக்கு நிலைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இனிவரும் காலங்களிலும் அவரது ஆசீர்வாதம் அவருக்குரியவர்கள் மேல் இருப்பதாக.

## தமிழ் சபையின் குருமார்

| | | | | |
|---|---|---|---|---|
| 1853 | - | 1855 | - | கனம். ஜீ.பெற்றீட் (Rev.G.Pettit) |
| 1855 | - | 1860 | - | கனம். ஹென்றி விட்லி (Rev.H.Whitley) |
| 1861 | - | 1871 | - | கனம். வில்லியம் ரோலன்ஸ் (Rev.William Rowlands) |
| 1871 | - | 1888 | - | கனம். டீ.வுட் (Rev.D.Wood) |

| | | | | |
|---|---|---|---|---|
| 1888 | - | 1890 | - | கனம். ஜே.இல்சிலி (Rev.J.Illsley) |
| 1890 | - | 1895 | - | கனம். ஜே.எல்.பிக்பர்ட் (Rev.J.L.Pickford) |
| 1881 | - | 1894 | - | கனம். எஸ்.எஸ்.சாமுவேல் |
| 1895 | - | 1901 | - | கனம். ஆர்.வீரசிங் |
| 1901 | - | 1930 | - | கனம். ஜே.வி.டேனியல் |
| 1931 | - | 1934 | - | கனம். எஸ்.சத்தியநாதன் |
| 1935 | - | 1957 | - | கனம். ஜோன் வீ. யோர்க் |
| 1958 | - | 1965 | - | கனம். ஈ.டீ.சாமுவேல் |
| 1966 | - | 1972 | - | கனம். பீ.வீ.கோயில்பிள்ளை |
| 1973 | - | 1977/8 | - | கனம். கொர்னேலியுஸ் சாமுவேல் |
| 1977/8 | - | 1983 | - | கனம். பெனட் பாலசிங் |
| 1984 | - | 1988 | - | கனம். ஜே.எஸ்.சார்ள்ஸ் |
| 1988 | - | 1992 | - | கனம். ஏ.ஈ.கோயில்பிள்ளை |
| 1993 | - | 1998 | - | கனம். ஐசக் செல்வரட்னம் |
| 1999 | - | 2004 | - | கனம். ஜுபிலி பொன்னையா |
| 2005 | - | 2010 | - | கனம். நோமன் ஜெயச்சந்திரன் |

## Bibliography


The Church Missionary Annual Reports, 1854, 1855, 1869, 1870, 1871 and 1861, microfilm collection of the church proceedings of the CMS for Africa and Asia, “Special Collection” University of Birmingham, England. U.K

The Church Missionary Society’s Clerical and Lay Missionaries. (other details cannot be given since, the cover and the first few pages of this book are missing at the Colombo, Church of Ceylon Diocesan Archives).

The Ceylon Church Missionary Gleaner, May 1985; May 1895; May 1897; May 1989 and May 1899.

The Church of Ceylon, A History 1945-1995, ed.Fredrick Mendis, Diocese of Colombo, Colombo 1995.

Minutes Books of the Tamil Congregation, (1) 1935 to 1951, (2) 1959 and (3) 1894 to 1993.

Minutes Book of the English Congregation 1967 to 1980.

Butterfield R.P.Padre Rowlands of Ceylon, Marshall, Morgan, and Scott Ltd., London and Edinburgh,

Harper, the Rev.Douglas, the Centenery Souvenir (English) 1953

Selladurai, John, 125th Anniversary Souvenir Christ Church, Galle Face (Tamil) 1978.

Stock, Eugene, The History of the Church Missionary Society: it's Environment, Its Work, and Its Men. Vol.3, (London, CMS, 1899) p.283.